மாம்பழ ஈக்களை கட்டுப்படுத்தும் இனக்கவர்ச்சி பொறி

First Published : 09 Aug 2011 02:40:08 PM IST

கன்னியாகுமரி, ஆக.8: கன்னியாகுமரி அரசு தோட்டக்கலைத் துறை அலுவலர் ப.குமரேசன் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,785 ஹெக்டேர் பரப்பில் மா சாகுபடி செய்யப்படுகிறது. நீலம், பெங்களூரா, அல்போன்சா, செந்தூரா, பங்கனப்பள்ளி போன்ற ரகங்கள் தோட்டங்களிலும், வீடுகளில் தனி மரங்களாகவும் சாகுபடி செய்யப்படுகின்றன. மாங்காய்கள் முற்றிய பருவத்தில் ஈ பூச்சியானது காய்களில் உட்கார்ந்து மெல்லிய துளையிட்டு ஆயிரக்கணக்கான முட்டைகள் இடும். இதனால் மாங்காய்களின் மேல்புறத்தில் தோல் பகுதியிலிருந்து பிசின் போன்ற திரவம் வடியும். தாக்கப்பட்ட பழங்களின் சதைப்பகுதியில் சிறிய புழுக்கள் தோன்றி பழத்தை அழுகச்செய்யும்.

கோடை மழை பெய்யும் போது மண்ணில் புழுவாக இருக்கும் இந்த பூச்சியானது மழை ஈரத்தை பயன்படுத்தி புழுவில் இருந்து வெளி வந்தவுடன் மாங்காய்கள் அல்லது பழங்களைத் தாக்கி அழுக செய்துவிடும். இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்க நேரிடும்.

எனவே, இந்த தாக்கத்தைக் கட்டுப்படுத்த ஆண் ஈக்களை இனக்கவர்ச்சி பொறி மூலம் கவர்ந்திழுப்பதன் மூலம் ஈக்களை அழிக்க முடியும். இதனால் மாம்பழம் சேதம் அடைதல் முற்றிலும் தடுக்கப்படுகிறது. இந்த இனக்கவர்ச்சி பொறி ஒரு ஏக்கருக்கு 4 அல்லது 5-ஐ வைக்க வேண்டும். அப்போது பொறியில் இருக்கும் மீனதல் யூஜினால் மருந்து மூலம் பூச்சிகள் கவர்ந்து இழுக்கப்பட்டு அழிக்கப்படுகிறது.

மேலும், மா ஒட்டு ரகங்கள் மற்றும் மாதுளை, சப்போட்டா ரகங்கள், நெல்லி ஒட்டு ரகங்கள் அரசு தோட்டக்கலை பண்ணை, கன்னியாகுமரியில் விற்பனைக்கு தயாராக உள்ளது என்றார் அவர்.

தொண்டி பகுதியில் மீன் விலை குறைவு

First Published : 09 Aug 2011 12:43:49 PM IST

திருவாடானை, ஆக. 8: திருவாடானை தாலுகா, தொண்டி கடல் பகுதியில் மீன் வரத்து அதிகரித்துள்ளதால், மீன் விலை குறைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

திருவாடானை தாலுகா, தொண்டி, எஸ்.பி. பட்டினம், சோழியக்குடி, நம்புதாளை, முள்ளிமுனை, காரங்காடு போன்ற கடல் பகுதியில் தற்போது மீன் வரத்து அதிரித்துள்ளதால், மீன் விலை குறைந்துள்ளது. ரூ. 200-க்கு விற்ற மீன் தற்போது ரூ. 150-க்கும் விற்கப்படுகிறது. அதுபோல,முரல் மீன், நகரை மீன் நண்டு ஆகியவற்றின் விலையும் குறைவாகவே இருந்தன.

**பரமக்குடியில் இரு உர விற்பனை நிலைய உரிமம் தாற்காலிக ரத்து**

First Published : 09 Aug 2011 12:44:04 PM IST

ராமநாதபுரம்,ஆக. 8: ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் விதிமுறைகளைக் கடைப்பிடிக்காத இரு உர விற்பனை நிலையங்களின் உர உரிமம் தாற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளதாக வேளாண்மை இணை இயக்குநர் க.ராஜேந்திரன் திங்கள்கிழமை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியது: அரசு விதிமுறைகளின்படி விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை விநியோகம் செய்வதற்கு உர உரிமம் பெற வேண்டும். அவ்வாறு உர விற்பனை உரிமம் பெறுபவர்கள் அரசின் விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடித்து, விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலையில் தரமான உரம் விநியோகம் செய்ய வேண்டும். விற்பனை நிலையத்தில் விலைப் பட்டியல் வைக்கப்படாமலும், அனுமதி பெறாத நிறுவனங்களிடமிருந்து உரங்களைக் கொள்முதல் செய்து இருப்பு வைக்கப்படாமலும் விற்பனை விவரப் பதிவேடு சரியாகப் பராமரிக்காமலும் இருந்து வந்ததால், இவ்விரு உர விற்பனை நிலையங்களின் உரிமங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து மேல் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருவதாகவும் இணை இயக்குநர் பா. ராஜேந்திரன் தெரிவித்தார். பேட்டியின்போது, வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) ஆர்.ராமசாமி பாண்டியனும் உடனிருந்தார்.

**விவசாயிகள் பயன் பெற நலத் திட்டங்கள்**

First Published : 09 Aug 2011 01:07:45 PM IST

கோபி, ஆக. 8: விவசாயிகளும், நுகர்வோர்களும் பயன்பெறும் வகையில் நலத் திட்டங்கள் தீட்டப்படுவதாக, அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறினார்.

கோபி நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதியில், வேளாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், பொதுமக்களிடமிருந்து 400க்கும் மேற்பட்ட மனுக்களை பெற்றார்.

செய்தியாளர்களிடம் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் பேசுகையில், மக்களிடம் இருந்து வரும் நியாயமான கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

கோபி பகுதியில் 6 வகையான வாழை ரகங்கள் பயிரிடப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அதிக மகசூல் தரக்கூடிய வீரிய ரக புதிய வாழை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு தார் விலை ரூ.500 வரை விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு ரூ.2 லட்சம் வரை லாபம் கிடைக்கிறது. இந்த வாழை ரகத்தை கோபி பகுதியில் அறிமுகம் செய்ய வேளாண்மைத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் காமராஜ், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அந்தியூர் எஸ்.எஸ்.ரமணீதரன், பெருந்துறை தோப்பு என்.டி.வெங்கடாசலம், கோபி கோட்டாட்சியர் பழனிசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**குறைந்த உழவில் நிறைந்த விளைச்சல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,00:00 IST

சமீபகாலமாக விவசாயிகள்இடையே மிகவும் வேகமாக பரவிவரும் நியதி குறைந்த உழவு அல்லது பாதுகாப்பு உழவு. குறைந்த உழவின் அடிப்படை உழவைக் குறைப்பதன் மூலம் மண்ணின் கலவையை அதிக அளவு மாற்றாமல், அறுவடைக்கு பிறகு மிஞ்சிய, முந்தைய பயிரின் எச்சத்தை அப்படியே விட்டு (30 சதம் வரை) அதில் புது பயிரை வளர்க்க முனைவது எனலாம். சில நேரங்களில் இந்த குறைந்த உழவு என்பதற்கு பதில் உழவே இல்லாமலேயே பயிரை வளர்க்கக்கூட முடியும்.

**குறைந்த உழவு செய்யும் முறை**: முந்தைய பயிரை அறுவடை செய்தபின் ஒன்று அல்லது இரண்டு முறை டிராக்டர் வைத்து உழவேண்டும். அதற்கு பின் ஐந்து நாள் இடைவெளியில் உடனடியாக இரு முறை வயலுக்கு நீர் பாய்ச்ச வேண்டும். இது களை செடிகளை முளைக்க தூண்டும். களை செடிகள் முளைத்தவுடன் (2-3 இலை விட்டபின்) கிளைபோசேட்டை 1 லிட்டர் தண்ணீரில் 15 மில்லிலிட்டர் என கரைத்து நாப்சாக் ஸ்பிரேயரில் பிளட் ஜெட் நாசில் கொண்டு செடிகளுக்கு மேல் நன்றாக விரவி தெளிக்க வேண்டும். கிளைபோசேட் தெளித்த 48 மணி நேரத்திற்கு பிறகு வயலில் 5 நாட்களுக்கு நீர் தேக்கி வைக்க வேண்டும். இது மண்ணை மென்மைப்படுத்தும். வயலை சமப்படுத்தியபின் நெல் நாற்றை வயலில் நடலாம். களையை முளைக்கும் முன் கட்டுப்

படுத்தும் களைக்கொல்லியைநடவு நட்ட 3 நாட்களுக்குப் பின் தெளிக்க வேண்டும். களைக் கொல்லியை தெளிக்கும்போது மண் முழுவதும் மூடி இருக்கும்படி மெல்லிய இழை அளவிற்கு தண்ணீரை தேக்கி வைக்க வேண்டும். பொதுவாக விவசாயிகள் 4 முதல் 5 முறை நடவு நடும் முன் வயலை நன்றாக உழுவார்கள். ஒரு உழுதலுக்கு 750 முதல் 900 ரூபாய் வரை ஆகும். குறைந்த அளவிலான உழவு மூலம் இதைக் குறைக்கலாம்.

**இந்த முறையால் ஏற்படும் நன்மைகள்:**

1. செடியின் வேருக்கு நன்கு பிடிப்பு கிடைக்கிறது.

2. நடவு நட்ட வயலில் உயிர் பிழைக்கும் நாற்றுகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

3. நிலத்தில் போடும் உரம் பயி ருக்கு அதிக அளவு கிடைக்கிறது. ஆழ உழுதால் உரம் மண்ணில் மிக அதிக அளவு ஆழ செல்ல வாய்ப்பு உள்ளது. எனவே உரம் வீணாக வாய்ப்பு உள்ளது. ஆனால் இம்முறை உழவால் பயிரின் வேர் பகுதியிலேயே உரம் தங்கிவிடும்.

4. உழவிற்கு செலவிடும் பணம் கணிசமாக (1750-2750/ஏக்கர்) சேமிக்கப்படுகிறது.

5. மண்ணின் அங்கக சத்து அதிக அளவு காக்கப்படுகிறது.

6. விளைச்சல் 350-425 கிலோ/ஏக்கர் அதிகரிக்கிறது.

7. பூட்டாக்குளோர் மற்றும் கிளைபோசேட் போன்ற களைக் கொல்லிகள் மண்ணில் தங்குவது இல்லை என்று ஆராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.-எம்.அகமது கபீர், தாராபுரம், 93607 48542.

**பயறுவகைப் பயிர் சாகுபடிக்கு பாஸ்போ பாக்டீரியா**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,00:00 IST



**நவீன தொழில்நுட்பம்**

நிலத்தில் கரையாத நிலையில் உள்ள மணிச்சத்தைக் கரைப்பதன் மூலம் தாவரங்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடிய மணிச்சத்தாகவும் மாற்றப் படுகிறது. பேசில்லஸ் மெகாதீசியம், பேசில்லஸ் பாலிமிக்ஸா, சூடோமோனாஸ், ஸ்ட்ரையேட்டா, மைக்ரோகாக்கஸ் ஸ்ட்ரெப்டோமைசின் என்னும் பாக்டீரியாக்கள் மண்ணிலுள்ள முக்கியமான பாஸ்போ பாக்டீரியாக்களாகும். இருப்பினும் பொதுவாக மெகாதீசியம் வெரைட்டி பாஸ்பாட்டிக்கம் என்னும் பாக்டீரியாதான் நாம் பயன்படுத்துகிறோம்.

பயறுவகைப் பயிர்களின் தழைச்சத்து தேவையை பூர்த்தி செய்வதில் அவற்றின் வேர்முடிச்சுகளில் உள்ள "ரைசோபியம்' என்னும் நுண்ணுயிர் பெரும் பங்கு வகிக்கின்றது. அதுபோல் அவற்றின் மணிச் சத்து தேவையைப் பூர்த்தி செய்ய நாம் ரசாயன உரங் களை இடுவது மட்டுமல்லாமல் அப்படி இடப்பட்ட மணிச்சத்து மண்ணில் கரையாத நிலையில் நிலைபெற்று வீணாவதைத் தடுக்க பாஸ்போ பாக்டீரியாவை நுண்ணுயிர் உரமாக இடுவது சாலச்சிறந்தது.

ஒரு எக்டருக்குத் தேவையான 3 பைகள் ரைசோபியத்தை (600 கிராம்) 3 பைகள் பாஸ்போ பாக்டீரியாவுடன் 600 மில்லி அரிசிக்கஞ்சியுடன் கலந்து ஒரு கூழ் போன்ற கரைசலாக்கிக் கொள்ள வேண்டும். இந்தக் கரைசலை நன்கு சுத்தப்படுத்தப் பட்ட விதையுடன் சிறிது சிறிதாக ஊற்றி நன்றாக கிளற வேண்டும். இதனால் ஒவ்வொரு விதையுடன் கருப்பு பூச்சு போன்ற அடைப்பு தெரியும். பொதுவாக வாடல், வேரழுகல் நோயைக் கட்டுப் படுத்துவதற்காக டிரைக்கோடெர்மா விரிடியை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற விகிதத்தில் விதைநேர்த்தி செய்ய வேண்டும். சூடோமோனாஸ் புளூரசன்ஸ் உடன் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதையை நேர்த்தி செய்யலாம். இவ்வாறு டிரைக்கோடெர்மா அல்லது சூடோமோனாஸ் ஆகியவற்றுடன் ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியாவைச் சேர்த்து விதைநேர்த்தி செய்யலாம். ஆனால் ரசாயன பூஞ்சாண கொல்லிகளான திரம் அல்லது கார்பன்டசிம் பயன்படுத்தும்பொழுது அவற்றுடன் விதைநேர்த்தி செய்த 24 மணி நேரம் கழித்து பின் உயிர் உரத்துடன் விதைநேர்த்தி செய்ய வேண்டும். பின்னர் விதைகளை சாக்கின்மீது நன்கு பரப்பி, நிழலில் சுமார் 30 நிமிடங்கள் உலர்த்த வேண்டும். இவ்வாறு உலர்த்தப்பட்ட விதைகளை உடனடியாக விதைப்பு செய்துவிடலாம்.

**பயன்கள்**: இது அங்கக அமிலங்களைக் கரைத்தும் நொதிகளைச் சுரந்தும் கரையாமல் இருக்கும் மணிச்சத்தைக் கரைத்து பயிர்கள் எடுத்துக்கொள்ளும் நிலைக்கு மாற்றிக் கொடுக்கிறது. மண்ணில் மணிச்சத்து நிலைபெறுவதைத் தடுக்கிறது. மண்ணில் இடப்படும் மணிச்சத்தின் உரப்பயன் பாட்டுத் திறனும் அதிகரிக்கிறது. நீரில் கரையாத மணிச்சத்து உரத்தை பயிர்களுக்கு எளிதில் கிடைக்குமாறு மாற்றித்தருகிறது. கதிர்களில் மணிகள் செழித்துவளர உதவுகிறது. அதனால் 10 முதல் 20 சதம் கூடுதல் விளைச்சல் கிடைக்கிறது. பரிந்துரைக்கப்பட்ட மணிச்சத்து உர அளவில்

15 முதல் 20 சதம் வரை குறைக்கலாம். (தகவல்: கி.க.அனிதா, பெ.பாண்டியராஜன், வே.ஜெயபால், அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நவலூர் குட்டப்பட்டு, திருச்சி-620 009. 99446 22422)

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சி மேலாண்மை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,00:00 IST



**பச்சை தத்துப்பூச்சி**: இளம் குஞ்சுகள் மற்றும் வளர்ந்த பூச்சிகள் சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் முதலில் மஞ்சள் நிறமடைந்து பின்னோக்கி வளைந்து சுருங்கிவிடும். தாக்குதல் தீவிரமடையும் பொழுது பூச்சியின் எச்சில் காரணமாக இலையின் ஓரங்கள் செங்கல் நிறத்திற்கு மாறி தீயில் கருகியது போல் காணப்படும். இலைகள் முற்றிலும் சுருங்கி உதிர்ந்துவிடும். பயிர் வளர்ச்சி குன்றுவதால் மகசூல் பாதிக்கப் படும். முன்பட்ட பருத்தியில் தாக்குதல் அதிகளவில் இருக்கும்.
**அசுவினி:** பசுமை கலந்த பழுப்பு நிறத்தில் காணப்படும் அசுவினி பூச்சி செடியின் இளம் தண்டு, கொழுந்து மற்றும் இலையின் அடியில் கூட்டமாக அமர்ந்துகொண்டு சாற்றை உறிஞ்சி குடிக்கும். தாக்குதல் தீவிர நிலையை அடையும் பொழுது இலைகள் சுருங்கி வளர்ச்சி குன்றி காணப்படும். இளம் செடிகள் படிப்படியாக காய்ந்துவிடும். பூச்சிகள் அளவுக்கதிகமான சாற்றை உறிஞ்சி குடித்தபின் எஞ்சியதை இனிப்பு கழிவுகளாக கீழ்புறமுள்ள இலையின் மேற்புறத்தில் வெளியிடும். இனிப்பு கழிவுகளை உண்பதற்காக வரும் எறும்புகள் அசுவினியை மற்ற பூச்சிகளின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கும். இனிப்பு கழிவுகள் மீது கரும்பூசணம் படர்ந்து இலையின் ஒளிச்சேர்க்கையை பாதிக்கும்.
**வெள்ளை ஈ**: பருத்தி பயிரிடக் கூடிய பகுதியில் பரவலாகக் காணப்படுகிறது. வெள்ளை ஈக்கள் கூட்டமாக இலையின் அடியில் அமர்ந்து சாற்றை உறிஞ்சி குடிப்பதால் இலைகளில் மஞ்சள்

நிறப்புள்ளிகள் நரம்பிலிருந்து ஓரத்தை நோக்கி செல்லும். பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும். இலைகள் சப்பைகள், மொக்குகள் உதிர்ந்துவிடும். பூச்சிகள் வெளியேற்றும் கழிவுகளால் கரும் பூசணம் படர்வதால் ஒளிச்சேர்க்கை தடைபடும். இலை சுருங்கல் எனப்படும் நச்சுயிரி நோயை பரப்புவதற்கு காரணமாக வெள்ளை ஈக்கள் உள்ளன.

**மாவுப்பூச்சி:** மாவுப்பூச்சிகள் கோடை காலத்தில் பருத்தி பயிரை தாக்கி பெரும்அளவில் மக சூல் இழப்பை ஏற்படுத்துகின்றன. மாவுப்பூச்சியின் குஞ்சுகள் மற்றும் முதிர்ந்த பூச்சிகள் பருத்தி பயிரைத் தாக்கி சாற்றை உறிஞ்சுகின்றன. இதனால் இலைகள் மஞ்சள் நிறமடையும்.

**கட்டுப்பாட்டு முறைகள்:**

1. தாக்கப்பட்ட செடிகள் மற்றும் களைச்செடிகளை பூச்சிகள் அதிகம் பரவாமல் பிடுங்கி அழிக்க வேண்டும்.

2. களைகளை அகற்றி வயல்களை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

3. நன்மை செய்யும் பூச்சிகளான பொரிவண்டுகள், நீல வண்ணத்துப் பூச்சி போன்றவை இருக்கும்பொழுது பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

4. விதைப்பிற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 7 கிராம் இமிடாகுளோ பிரிட் 70 டபிள்யூஎஸ் மருந்தை கொண்டு விதைநேர்த்தி செய்வதன் மூலம் எட்டு வாரங்களுக்கு பருத்தி செடியை சாறு உறிஞ்சும் பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாக்கலாம்.

5. இமிடாகுளோபிரிட் 200 எஸ்எல் 40மிலி, பாஸ்போமிடான் 40 எஸ்எல், 240 மிலி, டைமெத்தோயேட் 30 இசி 200 மிலி, மெத்தில் டெமட்டான் 25இசி 800மிலி, வேப்பங்கொட்டை கரைசல் 5 சதம் (10 கிலோ வேப்பங்கொட்டைக்கு 200 லிட்டர் தண்ணீர்) போன்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றை ஒரு ஏக்கருக்கு தேவையான தண்ணீரில் கலந்து தெளித்து அசுவினி, இலைப்பேன், பச்சை தத்துப்பூச்சிகளை கட்டுப் படுத்தலாம்.

6. பாசலோன் 35 இசி 1000 மிலி, குயினால்பாஸ் 25 இசி 800 மிலி டிரையசோபாஸ் 40 இசி 800 மிலி, அசிபேட் 75 எஸ்பி 500 கிராம், மெத்தில் டெமட்டான் 25 இசி 800 மிலி, மீன் எண்ணெய் சோப்பு ஒரு லிட்டருக்கு 25 கிராம், வேப்பங் கொட்டை கரைசல் 5 சதம், வேப்ப எண்ணெய் 1 லிட்டர் நீருக்கு 5 மி.லி. போன்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றை ஒரு ஏக்கருக்கு தேவையான தண்ணீரில் கலந்து தெளித்து வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தலாம்.

7. மாவுப்பூச்சியின் குஞ்சுகளை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு வேப்ப எண்ணெய் 20 மிலி. (அ) வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் (அ) மீன் எண்ணெய் சோப்பு 25 கிராம் கலந்து தெளிக்கவும். முதிர்ந்த பூச்சிகளை கட்டுப்படுத்த அசிபேட் 2 கிராம் (அ) டைமெத்தோயேட் 2 மி.லி. (அ) மெத்தில் டெமட்டான் 2 மிலி (அ) புரோபனோபாஸ் 2 மிலி (அ) குளோர்பைரிபாஸ் 5 மி.லி.ஐ ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

ஜட்டா கவிதா, சி.விஜயராகவன்,வேளாண்மை அறிவியல் நிலையம், ராமநாதபுரம்-623

503.மற்றும் ப.பாலசுப்பிரமணியன்,மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,செட்டிநாடு-630 102.

**ஓசூரில் இருந்து 500 டன் சாமந்தி பூ ஏற்றுமதி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,02:31 IST

ஓசூர்: வர லட்சுமி பண்டிகையையொட்டி ஓசூர் தாலுகாவில் இருந்து கர்நாடகா, ஆந்திராவுக்கு தினம் 500 டன் சாமந்தி பூக்கள் ஏற்றுமதியாகிறது. நடப்பாண்டு உற்பத்தி குறைவு என்பதால் ஏக்கருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகளவு மலர் சாகுபடி நடக்கிறது. ஓசூர், தளி, தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை, உத்தனப்பள்ளி மற்றும் பாகலூர் பகுதியில் ரோஜா, சாமந்தி, செண்டுமல்லி, மல்லிப்பூ மற்றும் பல்வேறு வகை அலங்கார மலர்கள் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக ஓசூர் தாலுகாவில் பாகலூர், ராயக்கோட்டை, பேளகொண்டப்பள்ளி, பூனப்பள்ளி, நெல்லூர் மற்றும் உத்தனப்பள்ளி பகுதியில் 5,000 ஏக்கரில் ஆண்டு முழுவதும் சாமந்தி பூ உற்பத்தி செய்யப்படுகிறது. ஓசூர் தாலுகாவில் உற்பத்தியாகும் சாமந்தி பூக்கள் பெங்களூரு, ஹைதராபாத், பூனே, சூரத், மும்பை மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு ஏற்றுமதியாகிறது. சாமந்தி பூ வியாபாரத்தை பொறுத்த வரையில் தீபாவளி, ஆயுதபூஜை, பொங்கல், விநாயகர் சதூர்த்தி மற்றும் வர லட்சுமி பண்டிகை உள்ளிட்ட ஹிந்து விழாக்களை குறி வைத்து சாகுபடி செய்யப்படுகிறது.கடந்த ஆண்டு உற்பத்தி அதிகரிப்பால், சாமந்தி பூ விவசாயிகளுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை. அதனால், நடப்பாண்டு விநாயகர் சதுர்த்தி, வரலட்சுமி பண்டிகைக்காக சாமந்தி பூ சாகுபடி பரப்பு 25 சதவீதம் குறைந்தது. வர லட்சுமி பண்டிகை வரும் 12ம் தேதி நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. வரலட்சுமி பண்டிகையொட்டி ஸ்வாமி சிலைகளை சாமபந்தி பூக்களால் அலங்கரித்து அனைவரும் சிறப்பு பூஜைகள் செய்வார்கள். அதே போல், அன்று பல்வேறு நிகழ்ச்சி ஏற்பாடுகள் பூக்களால் அலங்காரம் செய்யப்படும். கர்நாடகா, ஆந்திராவில் வர லட்சுமி பண்டிகை கொண்டாட்டத்தில் சாமி சிலை அலங்கரிப்பு, பூஜைகளில் சாமந்தி பூக்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. நடப்பாண்டு கர்நாடகா, ஆந்திராவில் இருந்து வர லட்சுமி பண்டிகைக்காக அதிகளவு பூக்கள் தேவைப்படுவதால், வெளிமாநில வியாபாரிகள் ஓசூரில் குவிந்துள்ளனர். விவசாய தோட்டங்களை மொத்தமாக குத்தகைக்கு எடுத்து சாமந்தி பூக்களை பறித்து ஆந்திரா, கர்நாடகாவுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். ஓசூர் பகுதியில் தினசரி 500 டன் சாமந்தி பூக்கள் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகிறது. நடப்பாண்டு சாகுபடி பரபரப்பு குறைந்ததால், ஓசூர் சாமந்தி பூக்களுக்கு கர்நாடகா, ஆந்திரா மற்றும் வட மாநிலங்களில் கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஒரு

கிலோ சாமந்தி பூக்கள் 200 ரூபாய் வரை விற்பனையாகிறது. இது குறித்து அந்திவாடியை சேர்ந்த விவசாயி பசுவப்பா கூறியதாவது: ஒரு ஏக்கர் சாமந்தி சாகுபடி செய்ய 35 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. வெளிமாநில வியாபாரிகள் ஒரு ஏக்கர் பூக்களை 2 லட்சம் ரூபாய் வரை குத்தகைக்கு எடுத்து செல்கின்றனர். அவர்கள் பூக்களை பறிக்க ஆட்களை கொண்டு, வாகனங்களில் ஏற்றி செல்கின்றனர். இதனால், கூலி ஆட்கள் சம்பளம், போக்குவரத்து செலவு மிச்சமாகியுள்ளதால் ஏக்கருக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். தோட்டக்கலை இயக்குனர் காளியப்பன் கூறுகையில், ""இந்த விலை உயர்வு தற்காலிகமானது. பண்டிகை முடித்த இரு நாளில் விலை குறைந்துவிடும், " என்றார்.

**செம்மறி, வெள்ளாடு பெற விண்ணப்பம் வரவேற்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,04:19 IST

வழங்கும், செம்மறி ஆடு, வெள்ளாடு பெற விரும்பும் பயனாளிகள் தேர்வுக்கான ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கலெக்டர் காமராஜ் பேசியதாவது: முதல்வர் உத்தரவுப்படி, ஈரோடு மாவட்டத்தில் முதற்கட்டமாக சென்னிமலை யூனியன் கவுண்டச்சிபாளையம் பஞ்சாயத்து, நம்பியூர் யூனியன் ஆண்டிப்பாளையம் பஞ்சாயத்து பகுதியில் செம்மறியாடு, வெள்ளாடு வழங்க, பயனாளிகள் தேர்வு செய்வதற்காக, கிராம அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தகுதியான பயனாளிகளை தேர்வு செய்ய கிராமசபை கூட்டம் நடத்தி, பயனாளிகளை தேர்வு செய்யும். அக்கூட்டத்தில் வெள்ளாடு, செம்மறியாடு பெறுவதற்கான தகுதி, திட்ட விதிகள் குறித்து விளக்கப்படும். அன்றைய தினம் தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். தவிர, 10ம் தேதி வரை விண்ணப்பங்கள் பெறப்படும். பெறப்பட்ட விண்ணப்பங்களைக் கொண்டு, 13ம் தேதி அலுவலர்கள் மற்றும் கிராமக்குழுவினர் சேர்ந்து தகுதியான நபரை தேர்வு செய்வார்கள். வரும் 15ம் தேதி நடக்க உள்ள கிராமசபைக்கூட்டத்தில் பயனாளிகள் பட்டியல் இறுதி செய்யப்படும். ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் 12 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கப்படும். எனவே, தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம், என, கலெக்டர் கேட்டுக் கொண்டார். உதவி இயக்குனர் (பஞ்சாயத்துக்கள்) நாராயணசாமி, கால்நடைத்துறை மருத்துவர்கள், யூனியன் தலைவர்கள் பங்கேற்றனர்.

**பண்ணை நாள் விழா**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,01:24 IST

திருப்பூர் : திருப்பூர், பெரியார் காலனியில் உள்ள ஒயிட் கிளவுட்ஸ் பப்ளிக் பள்ளியில் "வயலோடு விளையாடு' என்ற தலைப்பில் பண்ணை நாள் விழா கொண்டாடப்பட்டது.விவசாயம், பண்ணை மிருகங்கள் மற்றும் வயல் சார்ந்த வாழ்க்கை தன்மையை குழந்தைகள் எளிதில் உணர்ந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது. பல்லடம் அருகே உள்ள மாதிரி விவசாய பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கோழி, நாய் மற்றும் விவசாய பண்ணைகள் காண்பிக்கப்பட்டன.முயல், கோழிகள், புறா, மீன், அணில், ஆடு, பசு, மாட்டு வண்டி பயணம், சோளக்கொல்லை பொம்மை ஆகியவற்றை பார்த்து மாணவர்கள் விவசாயத்தை பற்றி அறிந்து கொண்டனர்.

**தென்னை விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,03:07 IST

ஆலங்குடி: புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே கீரமங்கலத்தில் உள்ள உழவர் இல்லத்தில் நடந்த தென்னை விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் மாவட்ட தலைவர் துரை தலைமை வகித்தார். கவுரவத்தலைவர் தமிழ்குமரன், தங்கராஜா, காமராஜ் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: தமிழ்நாடு தென்னை விவசாயிகள் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு லட்சம் கையெழுத்துகள் அடங்கிய மனுவை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வழங்க மாநிலக்குழு முடிவெடுத்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து 3,000 தென்னை விவசாயிகளிடம் கையெழுத்து வாங்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரம் செழிக்க தென்னை காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். அறந்தாங்கி, கீரமங்கலத்தில் கொப்பரை கொள்முதல் நிலையத்தை அரசு தொடங்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் மத்திய அரசு நபார்டு கொள்முதல் நிலையமும் அமைக்க வேண்டும்.ஈரியோபைட் சிலந்தி தாக்குதலில் இருந்து தென்னையை பாதுகாக்க மாநில அளவில் பூச்சி கட்டுப்பாட்டு முறையை கொண்டு வர வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.தென்னை விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் மாதவன் நன்றி கூறினார்.

**பரிய நெல் ரகங்கள் பயிலரங்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,02:57 IST

திருத்துறைப்பூண்டி: ""60 முதல் 180 நாட்கள் வரை சாகுபடி செய்யக்கூடிய பாரம்பரிய நெல் ரகங்கள் 47 வகை," உள்ளதாக கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன் தெரிவித்தார். திருத்துறைப்பூண்டி அடுத்த ஆதிரெங்கம் (தனியார்) இயற்கை விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் ""கல்லூரி மாணவிகளுக்கு பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்தும், சாகுபடி பற்றியும், அதனுடைய மருத்துவ குணம் பயன்பாடு குறித்தும்," பயிலரங்கம் நடந்தது.இதில் கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன் பேசியதாவது: 60 முதல் 180 நாட்கள் வடர சாகுடி செய்யக்கூடிய பாரம்பரிய நெல் ரகங்கள் 47 வகை உள்ளது. இதில் ஒவ்வொரு ரகமும் மருத்துவ குணம் கொண்டது. உவர் நிலங்களில் விளைய கூடியது. கடலோர பகுதிகளில் விளைய கூடியது. வெள்ளம், புயல், வறட்சி என தாங்கி வளரக் கூடிய நெல் ரகங்கள் பற்றியும், அதன் சாகுபடி முறைகள் குறித்து பேசினார். மேலும், இயற்கை விவசாய இடுபொருட்களான பஞ்ச காவ்யா, மூலிகை பூச்சி விரட்டி, அமுத கரைசல், மண்புழு உரம், ஊட்டமேற்றிய தொழு உரம், போர்ட்டோ மிக்சர், அசோலா வளர்ப்பு, ஆட்டூட்டம், நீர் மேலாண்மை குறித்து மாணவிளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. நாகை மாவட்ட இயற்கை விவசாய முன்னோடி கரியாப்பட்டிணம் சிவசுப்பிரமணியன், ஆந்திரா மதினாஜெயபின், கேரளாவை சேர்ந்த ராதிகா ஆகியோர் தங்கள அனுபவங்கள் குறித்து பேசினார்.

**விவசாயிகளின் விவரங்களை வேளாண் துறை சேகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,02:40 IST

கொட்டாம்பட்டி : கொட்டாம்பட்டி சிறு, குறு விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவது குறித்து அடிப்படை புள்ளி விபரங்கள் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் சேகரிக்கப்படுகிறது.

வேளாண்மை உதவி இயக்குனர் செல்வபாண்டி கூறியதாவது: கொட்டாம்பட்டி விவசாயிகள், தங்கள் நில சர்வே எண், நிலத்தின் மண்மாதிரி எடுத்து வேளாண்மை உதவி அலுவலரிடம் கொடுக்க வேண்டும். விவசாயிகளிடம் எடுக்கப்படும் புள்ளி விபரங்கள் இணையதளத்தில் பதிவு செய்யப்படும். மண்மாதிரி ஆய்வுக் கட்டணமாக ரூ.20 செலுத்த வேண்டும். கொட்டாம்பட்டி, வலைச்சேரிபட்டி, சொக்கம்பட்டி, தொந்திலிங்கபுரம், பள்ளப்பட்டி, பொட்டப்பட்டி, சூரப்பட்டி விவசாயிகள், வேளாண்மை உதவி அலுவலர் விமலாவையும்(96884 39772), சொக்கலிங்கபுரம், அயன்பாண்டாங்குடி, இனாம்பாண்டாங்குடி, தர்காகுடி, அய்யாபட்டி, திருச்சுனை, குன்னாரம்பட்டி, மணப்பச்சேரி விவசாயிகள், வேளாண்மை உதவி அலுவலர் உமாவையும்(97882 20595), கருங்காலக்குடி, கம்பூர், சுக்காம்பட்டி, கொடுக்கம்பட்டி, பூதமங்களம்

விவசாயிகள், வேளாண்மை உதவி அலுவலர் பாஸ்கரனையும்(90479 19951), வஞ்சிநகரம், கச்சிராயன்பட்டி, தும்பைப்பட்டி, எட்டிமங்கலம், அட்டப்பட்டி விவசாயிகள், வேளாண்மை உதவி அலுவலர் சிவகாமியையும்(99441 01363), சென்னகரம்பட்டி, மேலவளவு, பட்டூர், கேசம்பட்டி, சேக்கிபட்டி, கவட்டையம்பட்டி விவசாயிகள், வேளாண்மை உதவி அலுவலர் பிரபுவையும்(99526 30503) தொடர்பு கொண்டு விபரங்களை தெரிவிக்க வேண்டும், என்றார்.

**நெல் சாகுபடி அதிகரிக்கும் "லேசர் லெவலர்' எந்திரம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,00:02 IST

தேனி : நெல் சாகுபடியை அதிகரிக்க "லேசர் லெவலர்' என்ற புதிய இயந்திரத்தை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். விவசாயத்துறையில் தற்போது திருந்திய நெல் சாகுபடி திட்டம், வரிசை நடவு திட்டம் போன்ற புதிய தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் தற்போது ஒரு எக்டேருக்கு, 10.50 டன் விளைச்சல் உள்ளது. விளைச்சலை அதிகரிக்க தற்போது "லேசர் லெவலர்' என்ற இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. நிலத்தை புழுதி உழவு செய்து, மேல் மண் முழுவதையும் பவுடராக்கிய பின், "லேசர் லெவலர்' இயந்திரம் மூலம் சமன்படுத்த வேண்டும். இதன் மூலம் நெல் வயல் முழுவதும் ஒரே அளவாக தண்ணீர் நிற்கும். பழைய முறையில் சில இடங்களில் தண்ணீர் நிற்கும், சில இடங்களில் நிற்காது. தண்ணீர் நிற்காத பகுதியில் விளைச்சல் குறைவாக இருக்கும். தண்ணீர் அதிகம் தேங்கியிருக்கும் இடத்தில் அழுகல் நோய் ஏற்படும். "லேசர் லெவலர்' தொழில் நுட்பத்தில் சீரான மட்டத்தில் வயல் முழுவதும் தண்ணீர் நிற்பதால் விளைச்சல் 10 சதவீதம் அதிகமாக இருக்கும். தண்ணீர் 30 சதவீதம் சேமிக்கப்படும். அழுகல் நோய் ஏற்படாது. தற்போது சில விவசாயிகள் மட்டும் இதை பயன்படுத்துகின்றனர். அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தும் வகையில்,விவசாய பொறியியல் துறை சார்பில், விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

**நடவு இயந்திரம் வாங்க ரூ. 4 லட்சம் மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 10,2011,00:03 IST

தேனி : நெல் நடவு இயந்திரம் வாங்குவதற்கு, விவசாயிகளுக்கு நான்கு லட்சம் ரூபாய் வரை, அரசு மானியம் வழங்குகிறது. விவசாய தொழிலாளர் பற்றாக்குறை உள்ளதால், இயந்திர நெல் நடவு முறையை விவசாயத்துறை ஊக்கப்படுத்தி வருகிறது. இதற்காக நெல் நடவு இயந்திரம் வாங்கும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம், அதிக பட்ச மானியத்தொகை, 4 லட்சம் ரூபாய் என

விவசாயத்துறை அறிவித்துள்ளது.இதன்படி ஒரே நேரத்தில் ஐந்து வரிசை நடும் இயந்திரம் வாங்குவதற்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதன் விலை 2.5 லட்சம் ரூபாய். மானியம் 1.25 லட்சம் கிடைக்கும். ஒரே நேரத்தில் எட்டு வரிசை நடும் இயந்திரத்தின் விலை 16 லட்சம் ரூபாய். இதற்கு அதிகபட்ச மானியமாக 4 லட்சம் ரூபாய் கிடைக்கும். தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாய பொறியியல்துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது. சிட்டா, அடங்கல், ரேஷன்கார்டு, போட்டோவுடன் தங்கள் பகுதியில் உள்ள விவசாய உதவி செயற்பொறியாளர்களை அணுகலாம்.

**கரும்பு விவசாயிகளிடம் இன்று குறைகேட்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 09,2011,21:55 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் கரும்பு விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் இன்று நடக்கிறது.இது குறித்த கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் கரும்பு விவசாயிகள் மாதாந்திர குறைகேட்புக் கூட்டம் இன்று( 10ம் தேதி) நடக்கிறது. காலை 11.30 மணிக்கு துவங்கி நடக்கும் கூட்டத்திற்கு கலெக்டர் மணிமேகலை தலைமை தாங்குகிறார். துறை சார்ந்த அதிகாரிகள் முன்னிலை வகிக்கின்றனர். விவசாய சங்க பிரதிநிதிகளும், விவசாயிகள் பலரும் கலந்துகொண்டு தங்கள் குறைகள் குறித்த மனுக்களை கொடுத்து பயன்பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *இலவச கறவை மாடுகள், ஆடுகள் யார், யாருக்கு வழங்கப்படும் சட்டப்பேரவையில் ஜெயலலிதா விளக்கம்*

*சென்னை, ஆக.10–*
*இலவச கறவை மாடுகள், ஆடுகள் யார், யாருக்கு வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா விளக்கம் அளித்தார்.*
*வறுமைக்கோட்டுக்கு கீழ் இருப்பவர்கள்*

சட்டப்பேரவையில் நேற்று பட்ஜெட் மீதான விவாதத்தின்போது தளி தொகுதி எம்.எல்.ஏ. ராமச்சந்திரன் (இந்திய கம்யூனிஸ்டு) பேசும்போது, இலவச கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகள் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறார்கள்? என்று கேட்டார்.

அதுபோல, சிவகங்கை தொகுதி எம்.எல்.ஏ. குணசேகரன் (இந்திய கம்யூனிஸ்டு) பேசுகையில், வறுமைக்கோட்டுக்கு கீழ் இருப்பவர்களுக்கு அடித்தட்டு மக்களுக்கு இலவச கறவை மாடுகள், ஆடுகள் வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு உள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருப்பவர்களின் பட்டியல் இல்லை என்றும், வறுமைக் கோட்டுக்கு கீழ் இருப்பவர்கள் பற்றிய மத்திய அரசின் கணக்கெடுப்பு 10 ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்டதாக இருப்பதால் அதை ஏற்க முடியாது என்றும் முதல்–அமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். அது சரிதான். இப்போது ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

வருவாய் அடிப்படையில்...

இந்த திட்டங்களுக்கான பயனாளிகள் கிராம சபையில் தேர்வு செய்யப்படுவார்கள் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டு உள்ளது. உள்ளாட்சி தேர்தல் நடைபெற இருப்பதால், தங்களுக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று அடிப்படையில் பயனாளிகளை தேர்வு செய்ய வாய்ப்பு இருக்கிறது. எனவே, ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு கீழ் வருவாய் பெறுபவர்களை பயனாளிகளாக தேர்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஜெயலலிதா விளக்கம்

அதற்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா விளக்கம் அளித்தார். அதன் விவரம் வருமாறு:–

இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு வெளி மாநிலங்களில் இருந்து மாடுகள் வாங்கித்தரப்படும். கறவை மாடுகள் வாங்குவதற்கு பயனாளிகள், அரசு அதிகாரிகளுடன் வெளிமாநிலத்தில் நடைபெறும் மாட்டு சந்தைக்கு சென்று, அவர்களுக்கு பிடித்த மாட்டினை அவர்களே தேர்வு செய்து கொள்ளலாம். அவ்வாறு வெளிமாநிலத்திற்கு செல்லும்போது, பயனாளிகளுக்கான போக்குவரத்து செலவு, தங்கும் இடத்திற்கான செலவு ஆகியவற்றை அரசே கொடுக்கும். மாடு வாங்கிய பிறகு அதனை பயனாளியின் வீடு வரை எடுத்து செல்வதற்கான செலவையும் அரசே ஏற்கும்.

இந்த திட்டத்தின் முக்கிய பயனாளி மகளிராக இருப்பார்கள். குடும்ப பொறுப்பை கவனித்துக்கொள்ளும் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பயனாளி 60 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். பயனாளியின் பெயரிலோ அல்லது அவரது குடும்பத்தினருக்கோ ஒரு ஏக்கருக்கு மேல் நிலம் இருக்கக்கூடாது. தற்போது சொந்தமாக பசுக்களோ அல்லது எருமை மாடுகளோ இருக்கக்கூடாது.

30 சதவீதம் பேர் எஸ்.சி., எஸ்.டி.

பயனாளியோ அல்லது அவரது வாழ்க்கை துணையோ, தந்தை, தாய், மாமனார், மாமியார், மகன், மகள், மருமகன், மருமகள் ஆகியோரில் ஒருவர்கூட மத்திய அரசு, மாநில அரசு, பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகளில் பணியாற்றுபவராக இருக்கக்கூடாது. உள்ளாட்சி அமைப்புகள் எதிலும் உறுப்பினராக இருக்கக்கூடாது.

இலவச கறவை மாடுகள் பெறும் பயனாளிக்கு இலவச ஆடுகள் வழங்கப்படமாட்டாது.

*பயனாளிக்கு கிராமத்தில் நிரந்தர வீடு இருக்க வேண்டும். பயனாளிகளில் 29 சதவீதம் பேர் ஆதிதிராவிடர்களாகவும் (எஸ்.சி.), ஒரு சதவீதம் பேர் பழங்குடியினராகவும் (எஸ்.டி.) இருக்க வேண்டும் என்று நெறிமுறைகள் வகுக்கப்பட்டு உள்ளன.*

தமிழ்நாட்டிலே ஆடுகள் வாங்கப்படும்

*இதுபோல இலவசமாக 4 ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளி, நிலமில்லாத விவசாய கூலியாக இருக்க வேண்டும். அவரது வீட்டில் 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்டோர் இருக்க வேண்டும். ஏனென்றால், ஆடுகளை ஓட்டிச் சென்று மேய்க்க வேண்டும் அல்லவா!.*

*பயனாளியோ அல்லது அவரது வாழ்க்கை துணையோ, தந்தை, தாய், மாமனார், மாமியார், மகன், மகள், மருமகன், மருமகள் ஆகியோரில் ஒருவர்கூட மத்திய அரசு, மாநில அரசு, பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புகளில் பணியாற்றுபவராக இருக்கக்கூடாது. உள்ளாட்சி அமைப்புகள் எதிலும் உறுப்பினராக இருக்கக்கூடாது. மாடு பெறும் பயனாளிக்கு ஆடுகள் வழங்கப்படமாட்டாது. இந்த திட்டத்திலும், பயனாளிகளில் 30 சதவீதம் பேர் ஆதிதிராவிடர்களாகவும், பழங்குடியினராகவும் இருப்பார்கள். ஆடுகள் தமிழ்நாட்டிலேயே வாங்கித் தரப்படும் இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா பதில் அளித்தார்.*

சொந்த மாடு இருக்கக்கூடாது

*அதைத் தொடர்ந்து பெரம்பூர் தொகுதி எம்.எல்.ஏ. அ.சவுந்தரராஜன் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி) பேசுகையில், ஒருவர் மாடு வைத்திருந்து அது இறந்துவிட்டால், அவருக்கு இலவச மாடு வழங்கப்படுமா? என்று வினவினார்.*

*அதற்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா பதில் அளிக்கையில், இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்போது பயனாளிக்கு சொந்தமாக மாடு இருக்கக்கூடாது என்று தெரிவித்தார்.*

*300 சதுர அடியில் வீடு கட்ட ரூ.1.80 லட்சம்*

*முன்னதாக, எம்.எல்.ஏ. ராமச்சந்திரன் பேசுகையில், "பசுமை வீடுகள் கட்டும் திட்டத்திற்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்குவது போல, இந்திராகாந்தி நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கும் இதே அளவு தொகையை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.*

*அப்போது முதல்–அமைச்சர் ஜெயலலிதா குறுக்கிட்டு பேசும்போது, "சூரியசக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் 300 சதுர அடி பரப்பளவில், ஒரு லட்சத்து 80 ஆயிரம் செலவில் தமிழக அரசு கட்டித் தர உள்ளது. ஆனால், இந்திராகாந்தி நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் 200 சதுர அடியில் வீடு கட்டுவதற்கு மத்திய அரசு ரூ.33 ஆயிரம்தான் வழங்குகிறது. இந்தத் தொகையுடன் மேலும் 67 ஆயிரம் ரூபாய் சேர்த்து தமிழக அரசுதான் ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கிறது'' என்றார்.*

*சட்டப்பேரவையில் நேற்று நடந்த விவாதத்தின்போது, அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மலரவன் (கோவை), சவுந்தர்ராஜன் (பரமக்குடி), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி எம்.எல்.ஏ. பாலகிருஷ்ணன் (சிதம்பரம்) ஆகியோரும் பேசினார்கள்.*

# சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு ரூ.2,591.79 கோடி பாக்கி



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள், நடப்பு பருவத்தில் (செப்டம்பர்–அக்டோபர்) மே 15–ந் தேதி நிலவரப்படி கரும்பு விவசாயிகளுக்கு ரூ.2,591.79 கோடி பாக்கி வைத்துள்ளன என்று மத்திய உணவுத் துறைக்கான அமைச்சர் கே.வி. தாமஸ் மக்களவையில் தெரிவித்தார்.

ஆலைகள்பாக்கி வைத்துள்ள தொகை நடப்பு முழு பருவத்திற்கான மொத்த தொகையில் 6.25 சதவீதம் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் முந்தைய சில பருவங்களிலும் கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் ரூ.211.22 கோடி பாக்கி வைத்துள்ளதாக தெரிகிறது.

நடப்பு பருவத்தில் நம் நாட்டில் 2.42 கோடி டன் சர்க்கரை உற்பத்தி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம் சர்க்கரைக்கான தேவைப்பாடு சுமார் 2.15 கோடி டன்னாக உள்ளது. எனவே சர்க்கரை கையிருப்பு அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 2009–10 பருவத்தில் சர்க்கரை 1.90 கோடி டன்னாக இருந்தது.

உள்நாட்டில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தி அதிகரித்து வருவதையடுத்து மத்திய அரசு 21 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்துள்ளது. இதனால் ஆலைகளின் நிதி ஆதாரம் பெருகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கரும்பு அரவைப் பணிகள் நிறைவடைந்து விட்டன. அதே சமயம் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 20 ஆலைகளில் மட்டும் அரவை முடிவடையவில்லை என அமைச்சர் கூறியுள்ளார்.